**செய்தி வெளியீடு: 275** **நாள்: 09.06.2015**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் புரட்சிகரமான சுகாதார திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது!**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் பெருமிதம்!**

---

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் துறை உயரதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம், இன்று தலைமைச் செயலக மக்கள் நல்வாழ்வுத் துறை கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்தும், இத்திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. மேலும், பருவ மழை தொடங்குவதை முன்னிட்டு எடுக்கப்பட வேண்டிய தீவிர சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு கூட்டத்தில் பேசிய அமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் நல்லாட்சியில் சுகாதாரச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் இந்தியாவிற்கே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக மட்டுமல்லாமல் முன்னோடி மாநிலமாகவும் திகழ்ந்து வருகிறது. சுகாதாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் வகுத்துள்ள மில்லினியம் வளர்ச்சி இலக்குகளை (Millennium Development Goal) தமிழ்நாடு ஏற்கனவே அடைந்துள்ளது. தமிழ்நாடு வளர்ந்த நாடுகளுக்கு இணையான சுகாதாரத் தரத்தை அடைய வேண்டும் என்பது **மாண்புமிகு அம்மா** அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023 –இன் குறிக்கோளாகும். தொற்று மற்றும் தொற்றா நோய்களை தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், சிகிச்சை அளிப்பதிலும், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதிலும், தேசிய நலவாழ்வு குழுமம் / பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் இலக்குகளை அடைவதிலும் தமிழ்நாடு முன்னிலையில் இருந்து வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் தீவிர சிந்தனையில் உதித்து மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டும், மக்களிடம் ஏகோபித்த வரவேற்பையும் பெற்ற **அம்மா மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், சானிட்டரி நாப்கின் திட்டம், அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகம், அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா முழுஉடல்**

**பரிசோதனை திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி** போன்ற திட்டங்கள் உடனுக்குடன் மக்களிடம் சிறப்பான முறையில் சென்றடைய அனைத்து முயற்சிகளையும் முடுக்கிவிட மாண்புமிகு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

கடந்த 5 ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்பான முறையில் செயல்பட்ட காரணத்தினால் **மாண்புமிகு அம்மா** அவர்களின் நல்லாட்யில் நன்மதிப்பையும், பொதுமக்களின் நம்பகத்தன்மையையும் பெற்றுள்ளது. இதேபோன்று வரும் காலங்களிலும் சிறப்பான முறையில் மக்கள் நல்வாழ்வுத் துறை செயல்பட அனைவரும் முழு முயற்சியுடனும், உத்வேகத்துடனும் செயல்பட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சிறப்புச் செயலாளர் மரு. பி. செந்தில் குமார், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றம் ஓமியோபதி துறை ஆணையர் திரு. மோகன் பியாரே இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., மாநில நலவாழ்வு சங்க குமும இயக்குநர் (ம) தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் மரு. டேரேஸ் அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க இயக்குநர் திரு எஸ். நடராஜன், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் மரு. விமலா, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. மணி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் மரு. குழந்தைசாமி, உணவு தர கட்டுப்பாடு கூடுதல் ஆணையர் மரு. பி.வாசகுமார், மருந்து கட்டுப்பாடு இயக்குநர் திரு அப்துல் காதர் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**